# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவராண்டு 2005 | தைத்திங்கள் 16 | (29-1-75) புதன்கிழமை | விலை: சதம் 30


## தமிழர் கூட்டணி பெருவெற்றி! சிங்களக்கூட்டணி படுதோல்வி!

காங்கேசன்துறைத்தொகுதியைச் சேர்ந்த தெல்லிப்பளை பல நோக்கக் கூட்டுறவுச் சங்க நெறியாளர்கள் குழு—பொதுச் சபை உறுப்பினர் தேர்தலில் தமிழர் கூட்டணி பெரு வெற்றி பெற்றது. சிங்களக்கூட்டணி படுதோல்வியடைந்தது.

மேற்படி கூட்டுறவுச் சங்கத்துக்கு ஐந்து பொதுச் சபை உறுப்பினர்கள் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்டபோது அதில் நான்கு தமிழர் கூட்டணி ஆதரவாளர்கள் வெற்றி பெற்றனர். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டார்.

தெரிவு செய்யப்பட்ட தமிழர் கூட்டணி ஆதரவாளர

—3-ம் பக்கம் பார்க்க

## கெனமன் சார்! பதில் சொல்லுங்க சார்!



"தரப்படுத்தலால் தமிழ் மக்கள் மட்டுமல்ல நாட்டிலுள்ள சகலமக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக வ. பொ. வின் தலைவர் பீட்டர் கெனமன் புதிய கரடி யொன்றை அவிழ்த்து விட்டிருக்கிறார்! ஆட்டை அடித்துக் கொல்லும் புலிக்கு அஜீரணத்தால் ஏற்படும் துன்பத்தையும், உயிரையே பறிகொடுக்கும் ஆட்டின் துன்பத்தையும் ஒரே மாதிரியாகக் கணிக்கிறார் பீட்டர்! இதுதான் அவர்களது "தேசியக்" கண்ணோட்டம் போலும்! தரப்படுத்தலால் பாதிக்கப்பட்டவன் தமிழன்தான் என்பதை வெளிப்படையாக எடுத்துச் சொல்லுவதற்கு கூட அஞ்சுகின்ற இவர்கள் தானு தரப்படுத்தல் கொடுமையை நீக்கப்போகின்றனர்?

தரப்படுத்தல்வருமுன்னர் பொறியியல் துறைக்கு தெரிவுசெய்யப்பட்ட சிங்கள மாணவர் தொகை 51.7 வீதம்; தரப்படுத்தல் வந்த பின்னர், இது 1970ல் 57.8 வீதமாகி, 1972ல் 66.7 வீதமாகி, 1973ல் 73.4 வீதமாகி, 1974ல் 81.5 சத வீதமாகி—இப்படிப் படிப்படியாக உயர்ந்து வந்திருக்கிறதே! இதன் பொருள் சிங்கள மாணவன் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதா?

மருத்துவத்துறைக்கு தமிழ் மாணவன் 250 புள்ளிகள் எடுக்கவேண்டும்; சிங்

—4-ம் பக்கம் பார்க்க

## 'தமிழினம் இன்று நாடுவது

# தனி நாடு!

## பேரவையில் இதை முன்வைப்பேன்' வ. பொ.வுக்கு செல்வா பதில்!



தமது கட்சியின் கொள்கை தனிநாடுதான் என்பதை திரு. செல்வநாயகம் பகிரங்கமாக கூறுவாரா என்று திரு. வ. பொன்னம்பலம் விடுத்திருந்த சவாலுக்கு தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா மல்லாகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பதிலளித்தார்.

அவர் அன்று கூறியதாவது:-

"இந்நாட்டில் எமது தமிழினம் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளதை எவரும் மறுக்கமுடியாது. இதைப் பிரதிபலிப்பதாக காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவு அமையவேண்டும்.

—4-ம் பக்கம் பார்க்க

## முரசு கொட்டுது தமிழர் கூட்டணி!
## விழி பிதுங்குது சிங்களக் கூட்டணி!
## தமிழ் இனத்தவர் இங்கினி ஓரணி!
## தமிழ்பகைவரே! கட்டுங்கள் துணிமணி!

காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழினத்தை தாழ்த்தியுள்ள புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து சிங்களவர் கூட்டணியாகிய ஐக்கிய முன்னணியுடனும் சிங்கள அரசுடனும் மோதும் தமிழர் தலைவர் மூதறிஞர் செல்வாவுக்கு கட்சி பேதங்களை மறந்து தமிழ் சமுதாயம் அளித்துவரும் பேராதரவு கண்டுதமிழ் விரோதிகள் நிலைகுலைந்துள்ளனர்!

"வீட்டுக்கு நேரே புள்ளடி தமிழ் விரோதிக்கு அதுவே தலையடி" என்று காங்கேசன்துறையின் நாலாபக்கங்களிலும் எழுந்துள்ள தமிழர் பெரும்படையின் வெற்றி முழக்கம் கேட்டு சிங்களக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வ. பொ. தம்பல் மூலைகளுள் முடங்கத் தொடங்கிவிட்டது!

"வெற்றி வெற்றி; தந்தை பெறுகின்ற வெற்றி ஒவ்வொரு தமிழனும் பெறுகின்ற வெற்றி; தமிழர் சுதந்திரப் போராட்டத் தொடக்கத்தின் முதற்படித்தரை பெறப்போகும் வெற்றி" என்று தமிழ் இளைஞர்களும், இளமங்கையரும், மாணவரும், மாணவியரும், முதியோரும், பெரியோரும் எழுச்சிப்பாணி பாடி வருகின்றனர்!

மூதறிஞரை ஆதரித்து நாள்தோறும் 3, 4 கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு கூட்டமும் வெறும் தேர்தல் கூட்டமாக மட்டும் அமையாது விடுதலைக் கோட்டங்களாகவும் அமைந்து வருகின்றன. எங்கும் தமிழுணர்ச்சியும், எழுச்சியும் விடுதலை ஆவேசமும் கரைபுரண்டோடுகின்றது.

காங்கேசன்துறை தொகுதியில் தந்தை செல்வாவின் வெற்றிக்கு உழைப்பதற்கு தென் மன்னார், வவுனியா,

—4-ம் பக்கம் பார்க்க

### வெளியூர் வாக்காளர் காங்கேசன்துறை செல்கின்றனர்!

வெளியூர்களில் வாழும் காங்கேசன்துறைத் தொகுதி வாக்காளர்கள் தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வாவுக்கு பெப்ரவரி 6ம் திகதி இடைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக விடுமுறையில் காங்கேசன்துறை தொகுதி நோக்கி படையெடுக்கின்றனர். இடைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கும் சலுகையில்லாதாகையால் நேரடியாக வாக்களிப்பில்கலந்துகொள்வதற்காகஇவர்கள்தொழும் பிலிருந்தும் ஏனைய ஊர்களிலிருந்தும் காங்கேசன்துறை தொகுதிக்கு செல்கின்றனர்.

### நாளை கொழும்பில் பொதுக்கூட்டம்!

'காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தமிழினத்தின் பங்கு' பற்றி கொள்கை விளக்கம் தந்திட தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளையினர் ஏற்பாடு செய்துள்ள பொதுக்கூட்டம் நாளை (30-1-75) வியாழக்கிழமை மாலை 5மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கவிஞர் காசி ஆனந்தன், மு. சிவசிதம்பரம் எஸ். தொண்டமான், கோவை மகேசன் அ. வரதராசன், கரிகாலன், ஈழவேந்தன் க. நவசோதி உட்பட பலர் பேசுவர். இராமலிங்கம் நாகூர் கூட்டத்துக்குத் தலைமை தாங்குகிறார்.

இக்கூட்டத்தில் கோவை மகேசன் எழுதிய 'துரோகிகளே தூர விலகுங்கள்' எனும் நூலும், காசி ஆனந்தன் எழுதிய 'சோறு சுதந்திரமா?' எனும் நூலும் வெளியிடப்படவிருக்கின்றன.

## "வாக்களிப்பது அடிப்படை உரிமை! அதை மறுப்பது மாபெரும் கொடுமை! சேனாதிராசாவையும்-புஷ்பராசாவையும் சிறையில் வைத்திருப்பது மடமை!"



"அடிப்படை மனித உரிமைகளில் முக்கியமானதும் ஐ. நா.வின் மனித உரிமைப் பிரகடனத்தில்முக்கியஇடம் பெற்றதும், இந்நாட்டு அரசியலமைப்பின் அத்திவாரமாக இருப்பதும் ஒரு நாட்டின் பிரசை அந்நாட்டின் ஆட்சியிலே பங்குபற்றுவதாகும்.

ஒரு பிரசை தனக்கு விரும்பிய மக்கள் மன்றத்தின் பிரதிநிதியைத் தெரிவுசெய்வதன் மூலம் நாட்டு நிர்வாகத்தை கவனிக்கும் படி அவருக்கு அதிகாரம் அளிக்கிறார். சிலசந்தர்ப்பங்களில் ஒரு பிரசை நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு சிறையில் இருப்பதன்மூலமும் பாரதூரமான குற்றம் சுமத்தப்பட்டு விளக்கமறியலில் இருப்பதன் மூலமும் இந்த உரிமையை இழக்கின்றார்.

இந்த இருவரையும் விட வேறு எந்தக் காரணத்தாலும் ஒரு பிரஜை சிறையில் வைக்கப்பட்டு அவருடைய தொகுதியில் தேர்தல் நடக்குமானால் ஐ. நா. விழைவு பாதுகாக்கப்பட்ட மனித உரிமை அவருக்கு மறுக்கப்படுகிறது.

பெப்ரவரி 6ம் திகதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ள காங்கேசன்துறைத் தொகுதி வாக்காளர்களாகிய திரு. சேனாதிராசா திரு. புஷ்பராசா போன்றவர்களுக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கின்றனர் ... விரும்பியபடி இந்த உரிமை

—3-ம் பக்கம் பார்க்க

### அடுத்த தேர்தல் சிறப்பிதழ்

5—2—75 புதன் கிழமை வெளிவரும் சுதந்திரன் தேர்தல் சிறப்பிதழ் 4-2-75 செவ்வாய்க்கிழமையே எங்கும் கிடைக்கும். 8பக்கங்களின் வெளிவரவிருக்கும் இந்த இதழின் விலை சதம் 60 ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழினத்துக்கு எனது கடமையை நிறைவேற்றிய ஆத்ம திருப்தி எனக்குண்டு!'

தன்மீது வசைபாடும் சிங்களக் கூட்டணியின் கைபாட்களுக்குப் பதிலிறுத்து — உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

உள்ளத் தூய்மையோடு தமிழ் ஈழம் விடுதலை பெற உழைத்துவரும் தமிழரசுக் கட்சி மீது காலத்துக்குக் காலம் உளறுவாய்க்காரர் சிலர் உப்புச்சப்பற்ற கீழ்த்தர வசைகளைக் கக்கி வந்திருக்கிறார்கள்.

சிங்கள 'சிறி' இலக்கத் தகட்டை எதிர்த்துவிட்டு—பின்பு சிங்கள சிறி வண்டிகளில் தமிழரசுத் தலைவர்கள் போகிறார்கள்.

டாக்டர் நாகநாதனின் மகள் சிங்களம் படிக்கிறாள்.

தமிழரசுத் தலைவர்களின் பிள்ளைகள் இந்தியாவில் படிக்கிறார்கள்.

சத்தியாக்கிரகக் காசு எங்கே?

இப்படி அந்தப் 'பெரிய மனிதர்கள்' எங்கள் மீது பாடிய வசைபுராணம் ஏராளம்.

தந்தை செல்வா அவர்களைக் கூட 'காற்சட்டைக் காந்தி' என்று தாறுமாறாகக் கிழித்த மேதாவிகள் இவர்கள்.

இவர்கள்தான் இன்று என் மீதும் வசைபாட இறங்கியிருக்கிறார்கள்!

நான் அரசாங்கசேவையில் இருந்தபோது சிங்களத் தேர்வில் எழுதினேனும். அதில் தேறமுடியாது என்று தெரிந்தபின்பு என் வேலை பறிபோகப்போகிறது என்ற நிலை வந்ததும்—வேலையை விட்டு ராஜினாமாச் செய்து 'தியாகி' பட்டம் வாங்கிக்கொண்டேனும்.

இலங்கை அரசியல் வரலாற்றில்இடையிடையே கொட்டாவிவிட்டு குறட்டைவிட்டு உறங்கிவிட்டு — 'திடீர்' என்று மேடையில் குதித்து 'திட்டு இலக்கியம்' பாடி திருப்தி அடைகிறவர்களே—இப்படி என்மீது நியாய மற்ற நிந்தனைகளை வீசியிருக்கிறார்கள்.

பட்டதாரிமொழிபெயர்ப்பாளராய் நான் அரசாங்க



சேவையில் சேர்ந்தபோது சிங்களத்தேர்ச்சிப் பரீட்சையில் உட்கார்ந்து அத்தேர்ச்சி பெறுவேன் என்று உறுதிப் பத்திரத்தில் கையெழுத்திட்டே சேர்ந்தேன்—பின்பு சிங்களத்தேர்ச்சிப் பரீட்சையிலும் உட்கார்ந்தேன். உண்மை. இதை பெரிய குற்றமாய் இவர்கள்சோடிப்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

தமிழ் அரசாங்க ஊழியர் மீது 'சிங்களத் தேர்ச்சி' திணிக்கப் பட்டபோது — அத் திணிப்பை தமிழரசுக் கட்சி — வன்மையாக எதிர்த்தது. இன்றும் எதிர்க்கிறது. என்றும் எதிர்க்கும்.

ஆனால் இச்சிங்களத் தேர்ச்சி பல ஆயிரம் தமிழ் அரசாங்க ஊழியர்மீது பலாத்காரமாகத் திணிக்கப்பட்டதால் — நேரடியாக தமிழ் அரசாங்க ஊழியர்களை சிங்களத்தேர்ச்சிக்கு எதிரான போராட்டத்தில் இறக்குவது பொருத்த மற்றது—அவர்கள் வேலை பறிபோகவும்—அவர்கள் குடும்பங்கள் அநாதைகளாகவும் வழிவகுக்கும் என்று கருதிய தமிழரசுக்கட்சி — அரசாங்க தமிழ் ஊழியர்கள் கட்டாயத்தின் பேரில் வேறு வழியின்றி-சிங்களத்தேர்ச்சி

கணைக்கான தமிழ அரசாங்க ஊழியர் அலைவரும்கோழைகள் என்று கூறுகிறார்களா?

அது ஒரு புறம் இருக்க — இப்படி 'அவட்டல்' வேலை செய்யும் இந்த அயோக்கியர்கள் யார்? தமிழ் அரசாங்க ஊழியர் மீது சிங்களத்தேர்ச்சி திணிக்கப்பட்டபோது அதை ஏற்றுக்கொண்டு 'அநுசரி' என்று கூறிய பச்சைத் துரோகிகள் அல்லவா இவர்கள்! இன்றும் தமிழ் இனத்தை குழிதோண்டிப் புதைக்க எதிரிகளின் காலை நக்கிப் பிழைத்து வரும் எட்டப்பர்கள் அல்லவா இவர்கள்?

என்னேடுஒருவன்சண்டை போடுகிறான் என்று வைத்துக்கொள்வோம், என் கைகளை அவன் இறுகப் பிடித்து முறுக்கி வளைத்து — அசைய முடியாதபடி மடக்கி வைத்துக்கொண்டான் என்றும் நினைத்துக் கொள்ளுங்கள். நான் கையை அசைக்க

நான் ஒரு 'தியாகி' மாதிரிக் காட்டி—அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு எதிராக இராஜினாமாச் செய்வது போல் நடித்து வெளியேறினேனும்.

முதலில் இவர்கள் கூற்றுப்படி சிங்களத் தேர்ச்சி பெறுத ஒரு தமிழ் அரசாங்க ஊழியன் வேலையை இழக்கும் பரிதாப நிலையில் இருக்கிறான் என்பதை எவ்வளவு அப்பட்டமாக ஒப்புக்கொள்கிறார்கள். அட! சண்டாளர்களே! இப்படிச் சிந்திக்கும் சந்தர்ப்பங்களிலாவது நீங்கள் தமிழனின் இழி நிலையை உணர்ந்து மனமாற்றம் பெறமாட்டீர்களா?

என்னுடைய ஆன்மாவோடு சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தை உங்களுக்கு நிரூபித்துக்காட்ட என்னால் முடியாது. புதிய அரசியல் அமைப்புச்சட்டம் இயற்றப்பட்டபோது என் உள்ளம் எவ்வளவு புண்பட்டது என்பது என் ஆன்மாவுக்கே தெரியும். என்

## பழிசுமத்தும் உளறுவாயர்களுக்கு உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் சாட்டை!

பெறுவதை அவர்களுடைய குற்றமாகக் கொள்ளாமல்—அரசாங்கத்தின் குற்றமாக கொண்டு— வேறு வழிகளில் சிங்கள இனவெறி ஆட்சிக்கு எதிராகப்போராடி விடுதலை பெறுவது என்ற முடிவு செய்தது.

சிங்களத்தேர்ச்சியை தமிழ் அரசாங்க ஊழியர் மீது திணிக்கும் அரசாங்கமே கொடியது! சிங்களத் தேர்ச்சிப்பரீட்சைக்கு உட்காரும் தமிழ் அரசாங்க ஊழியன் கொடியவனல்ல—துரோகி அல்ல! பாவம் அவன் ஓர் அப்பாவி!

சிங்களத்தேர்ச்சிபெறும் பரீட்சையில் உட்கார்ந்த என்னை ஒரு கோழை மாதிரிக் காட்ட முற்படும் எதிரிகள் இன்று இலங்கையில் கடமையாற்றும்பல்லாயிரக்

முடியவில்லை! சரி—கை அப்படியே இருக்கட்டும். கால் சும்மாதானே இருக்கிறது. காலால் ஓங்கி உதைப்பேன், சண்டையை விடமாட்டேன்.

இப்படித்தான் சிங்களத் தேர்ச்சித் திணிப்பால் கையை மடக்குவதுபோல் அவர்கள் தமிழ் அரசாங்க ஊழியர்களை மடக்கியபோது தமிழரசுக்கட்சி காலால் உதைப்பதுபோல்வேறு வழிகளில் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி—இன்று வெற்றிப் பாதை நோக்கி வீர நடைபோடுகிறது.

என மீது குற்றம் சாட்டுகிறவர்கள் சுமத்தும் அடுத்த குற்றச்சாட்டு 'சிங்களத் தேர்ச்சி பெறுததால் வேலை பறிபோகப்போகிறது என்ற நிலை வந்தபோது—

ஆன்மாவுக்கு மட்டும் அல்ல—என் நெருங்கிய நண்பர்களுக்கு என் இயக்கத் தோழர்களுக்கு—என்னைப்பற்றி நன்றாகத் தெரியும். எனவே இந்த அளவோடு என் ராஜினாமா பற்றிய என் விளக்கத்தை நிறுத்திக்கொள்கிறேன்.

என் வாழ்வில் நான் என் ஆசைக்கு—என் திருப்திக்கு என் தமிழினத்துக்குக் கடமை செய்திருக்கிறேன்.

உங்களைப்போல் வாழ்ந்திருந்தால் — எனக்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் பதவியோ—பால் கோவுக்குப்போய் மருத்துவம் பெறும் வாய்ப்போ—அமைச்சர்களின் ஆசிர்வாதமோ—அம்மையாரின் அனுக்கிரகமோ கிடைத்திருக்கும்!

என்னால் அப்படி வாழ முடியாது ஐயா!

# ஸ்ரீதனஸ்ரீ ஏழுமுகநாவலர்

## காட்சி (3)

(ஆதாவு திரட்ட அன்னம்மாள் வீட்டில் நுழைகின்றனர் அம்பலத்தாரும் அண்ணாவியாரும். அன்னம்மாளின் மகளும் மருமகனும் எங்கோ புறப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். நாய் குரைக்கிறது.)

அம்ப: அன்னம்மாக்கா... அன்னம்மாக்கா... நாயைப் பிடியெணை.

அன்ன: ஆரது? எட தம்பி அம்பலம்... எலச்சன் துவங்கிவிட்டுதுபோலையிருக்கு.......... அண்ணாவியாரும் சேர்ந்திட்டார். நல்ல சமாக்கச்சேரிதான். (நாய் தொடர்ந்து குரைக்கிறது)... அடி நாயை சும்மா விடலன்... அதுக்குப் பசி...

அண்ணா: அதுக்கு ஏதாவது போடடி. புள்ளே... இல்லாட்டி கனைக்கிறதும் கேக்காது.

அன்ன: மனுசருக்கே இன்னா சாப்பாடு இல்லாமை கெடக்கேக்கை நாய் பூனைக்குச் சவனிக்கிறது— நான் காய்ஞ்ச பாண் துண்டு ரெண்டு போட்டனான்...... உதில பாக்கியத்தின்ர பொடியன் தின்னட்டன்...... எடுத்துத் தின்னட்டாளுக்கும். எட அம்பலம்... (ஒப்பாரியாக) உன்ரை ஆக்களின்ரை ஆட்சி வந்த தோடையெல்லோ சாப்பாட்டுக்கெண்டு நாயும் மனிசரும் கடிபடுறினம்...... க்கோ...

அம்ப: அக்காத்தைக்கு எப்பவும் என்னோடை பரிகாசம்தான்...

அன்ன: உன்னாலையெடா உன்ரை ஆட்சி வந்த தோடை ஒருநேரப் பொழுதைக் கழிக்க நான்படும் பாடு சொல்லிச் சரியாது... எனக்கு சலிப்பு சலிப்பா வருகுதடா... (அழுகை) ஏன் தான் இப்படி ஏழையளை போட்டு வாட்டுறுங்களோ. (கண்ணீரை சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு) நீ கொழும்புக்குப் போற நேரம் இதுகளை அவவிட்ட கேட்டாலென்ன. மெய்ய... அதுகளைக் கேக்க மாட்டாம் இஞ்சை அவ வந்தால் கொடியும் குடையும் தூக்குவாய்...

அண்ணா: புள்ளே எப்பவும் உப்பிடித்தான் உனக்கு ஒப்பாரி வைக்கிறகுணம், தங்கச்சியோடை பேசவும் வாத்தியார், தங்கச்சி எங்கை பகல் படத்துக்கு வெளிக்கிடுதுபோலை. (மருமகனிடம்) தம்பி... இஞ்சை வாத்தியார் கதைக்கவேணுமாம்.

மரும: நாங்கள் படம் பாக்க போகேல்லை அண்ணாவியார், பாண் கியூவில நிக்க வெளிக்கிடுறம்......... படம் எங்கை பாக்கிறது. வாத்தியாரும் அவற்றை முற்போக்கு தோழர்களும் சத்தம் போட்டுத்தான் உங்கை புதுத் தமிழ்ப்படங்கள் வராமை நிப்பாட்டிப்போட்டினமே. தமிழ் நாட்டிலையிருந்து பேப்பர் புத்தகங்கள் வராமை நிப்பாட்டிச்சினம், படங்கள் வராமை நிற்பாட்டிச்சினம்... என்னென்ன கூத்தெல்லாம் ஆடிச்சினம்.

அம்ப: தம்பி விசயம் விளங்காமை கதைக்கக்கூடாது. உள்ளூர் தமிழ்ப் படத்தயாரிப்பை ஊக்குவிக்கிறதுக்காகத்தான் இந்தியாவிலை இருந்துவாற தமிழ்ப்படங்களைக் குறைச்சிருக்கிறம். தமிழ் நாட்டுச் சஞ்சிகைகள் இரைப்படங்கள் எல்லாமே தரங்கெட்டவை...

மகன்: வாத்தியார் அங்கைதான் படிச்சுப் பட்டமெடுத்தனீங்களாக்கும்...

அம்ப: அத்தோட வெளிநாட்டுச் செலாவணியெண்டு ஒரு பிரச்சினையிருக்கு...

மரும: இங்கிலாந்து அமெரிக்கா உங்கையெல்லாமிருந்து பொம்ஸ்பொண்ட் படங்களும் அரைநிர்வாணப் படங்களும் வரலாம்...தமிழ் நாட்டிலையிருந்து தான்...

அம்ப: அத்தோடை தம்பி உந்த தி. மு. க. பிரச்சாரப் படங்களும் எம். ஜி. ஆர். படங்களும் வந்து எங்கள் உள்நாட்டு அரசியலிலை ஒரு தாக்கத்தை உண்டாக்கவ...

மரும: எம். ஜி. ஆர். முற்போக்குவாதியெண்டும் உங்களின்ரை சிநேகிதர் எண்டும் முன்னம் அறிக்கை விட்டியள்...

அம்ப: அது எம். ஜி. ஆர். தி. மு. க. வைவிட்டு விலகின பிறகு, அதுக்கு பிறகு அவர் முற்போக்குவாதியாகி விட்டார். அவர் இப்ப ஒரு சோசலிசவாதி...

அண்ணா: அப்படியெண்டால் எம்ஜியாரோடை நடிச்ச அந்தப் பொடிச்சி செயலலிதாவும் இப்ப முற்போக்குவாதிய வாத்தியார்..? தெரியாமக் கேக்கிறன்? சோடி சோடியாத்தானே படத்துக்கு நடிக்க ஒழுங்குசெய்யிறவை...

மரும: (மனைவியிடம்) இஞ்சாரும்... வாரும்... வெள்ளென க் கியூவிலை நிண்டால் தான் பாண் அம்பிடும்...... (போகின்றனர்.)

அம்ப: அக்காத்தை, இந்த எலச்சனிலை என்னை ஆதரிக்காமல் நீ வேறை ஆரை ஆதரிக்கப் போறாய்...?

அன்ன: எட அம்பலம்... உனக்கு வோட்டுப் போட்டால் உந்த அரிசி சீனி விலையெல்லாம் ஆகரிக்கிறதெண்டு வரும். உண்ணாணையெடா உங்களின்ரை ஆட்சி வந்ததோடை ஒரு நேரச் சாப்பாடுதான்...... அவரும் போக்கறப் போயிட்டார்... (ஒப்பாரியில் அழுகிறாள்.) நான்தோடு அடைவு வைச்ச கொண்டுட்டான் ஈடு வைச்சேன்... தான் தாலி அடைவுவைச்சு தாய்க்காணி ஈடுவைச்சேன்... இங்...கோ.

அண்ணா: வாத்தியார்: உங்களுக்கு இச்சனமும் இல்லை... சும்மா சொல்லக் கூடாது. அன்னம்மாளுக்கு நல்ல சாரீர வசதி இருக்கு.

அம்ப: இதுகளைச்சவாய்ப் போச்சு... வாரும் அண்ணாவியார், (போகின்றனர்.)

திரை.

## காட்சி (4)

(பரியாரி பரமர் வீட்டுக்கு வாக்குக்கேட்டு வருகிறார் அம்பலச் சட்டம்பியார்.)

பர: வாருங்கோ வாத்தியார்... இருங்கோ...

## கரிகாலன்

அம்: பரியாரியார், எலெக்சனுக்கு வந்திருக்கிறனெண்டு...

பர: ஓ... நல்லாய்த் தெரியும். இந்த எலச்சன் விசயங்களிலை என்ரை பெண்சாதிக்குத்தான் விசாதகம் அதிகம். நான் அவவோடை கதைச்சுத்தான் சொல்லவேணும். (உள்ளே திரும்பி) மங்களம்! மங்களம்!

அம்: (வயிற்றைப் பிடித்துக்கொண்டு) இந்த வயித்துக்கை கொஞ்சம் குழப்பமாய் இருக்குப் பரியாரியார் என்னண்டு தெரியேல்ல...

—4-ம் பக்கம் பார்க்க

கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதியிலே வந்ததிந்தச் சாதி! இதைப்
# பாரினிலே ஒழிப்பதெங்கள் நீதி!
# வாயினிக்க சமதர்மம் பேசுவோர்கள்
# சமத்துவத்தை எதிர்த்ததென்ன நீதி?

என்னருமைச் சிறுபான்மைத் தமிழ் சகோதரர்களே! ஈழத்தமிழ் சமுதாயத்தின் கண்மணிகளே!

முதலில் உங்களை 'சிறுபான்மைத் தமிழர்கள்' என்று தனியே பிரித்து அழைப்பதற்கு என்னை மன்னித்துவிடுங்கள்!

இப்படி உங்களை அழைப்பது எனக்குப் பிடிக்கான்றது!

தமிழர்கள் அனைவருமே இந்நாட்டில் சிறுபான்மையினராக இருந்து சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழ் துன்பப்படும்போது — நமக்குள்ளே சிறுபான்மை என்ன பெரும்பான்மை என்ன?

தமிழனுக்குள்ளேயே சிறுபான்மை இருப்பதை நான் அறவே வெறுப்பவன் — அதை ஏற்றுக்கொள்ளாதவன் நான்!

ஒன்றே குலம்—ஒருவனே தேவன் என்கிற அடிப்படையில் ஒன்றுபட்ட தமிழ் சமுதாயம்—சமதர்மத் தமிழ் சமுதாயம் உருவாகவேண்டும் என்பதே எனதுகொள்கை—நான்சார்ந்துள்ள இயக்கத்தின் கொள்கை!

இருந்தபோதிலும் — இவருக்கு புரிய வேண்டுமே என்பதற்காக 'சிறுபான்மைத் தமிழர்' என்ற அடைமொழியுடன் உங்களைக் குறிப்பிட்டேன்!

என் அன்புச் சகோதரர்களே! காங்கேசன்துறைத் தொகுதியில் உங்களுக்குஒரு பெரிய கடமை காத்திருக்கிறது!

தமிழ் சமுதாயத்தின் ஒன்றுபட்ட குரலே— தமிழன் பாதியிலே வந்த சாதியினால் பிரிக்கப்பட்டிருந்தாலும் அவற்றையெல்லாம் களைந்துவிட்டு—ஒரே இரத்தமாக இணைந்துவிட்டான் என்பதை நம்மை அடிமைகொள்ளத்துடிக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எடுத்துக்காட்டவேண்டிய நேரம் இது!

"ஆயிரம் உண்டிங்கு சாதி —எனில் அந்நியன் வந்து புகல் என்ன நீதி?" என்று சமதர்மக் கவிஞன் பாரதி கேட்டது போல கேட்கவேண்டிய நேரம் இப்போது வந்திருக்கிறது!

35 இலட்சம் தமிழ் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு உங்களிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது!

தமிழ் சமுதாயத்தின் ஒளி விளக்கு—சுதந்திரபுருஷன்—தமிழ் ஈழத்தின் மார்ட்டின் லூதர்—தந்தை செல்வா 35இலட்சம் தமிழ் மக்களின் பிரதிநிதியாக சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இடைத்தேர்தலில் போட்டியிடுகிறார்!

தமிழரசுக்கட்சியின் ஆரம்பக் கூட்டத்திலேயே— அதாவது 1949ம் ஆண்டு டிசம்பர் 18ம் திகதி கொழும்பில் நடைபெற்ற முதல் கூட்டத்திலேயே—சாதியையும் தீண்டாமையையும் சாடி—ஒன்றுபட்ட சமதர்மத் தமிழ் சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அறை கூவல்விடுத்த சமூக சீர்திருத்தவாதிஎங்கள் தந்தை செல்வா!

சாதியையும் தீண்டாமையையும் ஒழிப்பதை 1949ம் ஆண்டே தனது அடிப்படை இலட்சியங்களில் ஒன்றாக பிரகடனப் படுத்தியுள்ள கட்சி ஒரே தமிழரசுக் கட்சி!

சாதி வெறியை எதிர்த்து சண்டமாருதப் பிரசாரம் செய்து—உயர் சாதி என்று கூறப்படுவோரிடம்மனமாற்றம் ஏற்படுத்தி — ஆலயக் கதவுகளை திறந்து விடச் செய்த கட்சி தமிழரசுக் கட்சி!

சாதிபேதம் காட்டுவதை குற்றமாக்கும் சமூக ஏற்றத்தாழ்வு தடை மசோதாவை 1957ம் ஆண்டு முதன்முதலாக பாராளுமன்றத்தில் முன்மொழிந்து—அது சட்டமாவதற்கு காரணகர்த்தர்களாக இருந்தவர்கள் காலஞ்சென்ற இராசவரோதயம், அமரர் வன்னியசிங்கம் ஆகிய தமிழரசுக் கட்சிக்காரர்களே!

கிராமம் கிராமமாக பாதயாத்திரை மேற்கொண்டு— உங்கள் வீடுகளில் சமபந்தி போசனம் செய்து சாதியாதியைச் சாகடித்தவர்கள் தமிழரசுக்கட்சிக்காரர்களே!

உங்கள் உரிமைக் குரலும் பாராளுமன்றத்தில் ஒலிக்க வேண்டுமென்பதற்காக — உங்கள் சார்பில் முதன் முதலாக திரு. ஜி. நல்லையாவை செனட்டராக்கி மகிழ்ந்தவர்கள் தமிழரசுக்கட்சிக் காரர்களே!

சாதிவெறிபிடித்துதேனீர் கடைகளிலும், உணவு விடுதிகளிலும், மற்றும் பொது இடங்களிலும் உங்களை ஒதுக்கிய உயர் சாதி இந்துக்கள் என்று கூறப்படுவோரை சட்டத்தின் முன்னிறுத்தி— நீதிமன்றங்களில் அவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தவர்கள் — திரு. வி. கதிரவேற்பிள்ளை, சு. நடராசா, க. ஜெயக்கொடி போன்ற தமிழரசுக் கட்சியின் சட்டத்தரணிகளே!

தீண்டாமை மட்டுமன்றி சாதியும் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் — அதற்கான விதி அரசியல் சட்டத்திலிடம் பெறவேண்டுமென்றும் அரசியல் நிர்ணய சபையில் தீர்மானம் கொண்டு வந்து அதற்காக வாதாடியவர்கள் நம் தமிழரசுக் கட்சிக்காரர்களே!

ஆறு அம்சத்திட்டத்தில் ஒன்றாக— சாதியொழிப்பையும் ஏற்றுக்கொண்டிருப்பது தமிழரசுக்கட்சியையும் உள்ளடக்கியுள்ள தமிழர் கூட்டணியே!

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசத்தை அன்று எதிர்த்த திரு. சி. சுந்தரலிங்கத்தை இன்று மனமாற்றம் பெறச்செய்து— சாதியொழிப்பையும் உள்ளடக்கிய ஆறு அம்சத்திட்டத்தை அவரும் ஏற்றுக்கொள்ள வைத்தவர்கள் தமிழர் கூட்டணியினரே!

இவற்றையெல்லாம் நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள் என்றாலும் நினைவூட்டுவதற்காகவே சொல்லுகிறேன்!

அதே நேரத்தில் தந்தையை எதிர்த்து, அரசாங்கத்தின் சார்பில் போட்டியிடும் சமதாமம பேசுகின்ற வி. பொன்னம்பலத்தின் கம்யூனிஸ்ட் கட்சி சாதியொழிப்புக்கொள்கையில் கடைப்பிடித்துவரும் இரட்டை வேடத்தைப் புரிந்துகொள்ளுங்கள்!

அரசியல் நிர்ணய சபையில் புதிய அரசியல் சட்டம் தீட்டப்பட்டநேரத்தில்தீண்டாமை யொழிப்பு — சாதி ஒழிப்புபற்றி வி. பொன்னம்பலத்தின் கம்யூனிஸ்ட் கட்சி மூச்சக்கூட விடவில்லை!

மூச்சுவிடாதது மட்டுமல்ல —சாதியும் தீண்டாமையும் ஒழிக்கப்படவேண்டும்என்று தமிழரசுக் கட்சி கொண்டு வந்த தீர்மானத்தை கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாசக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் சேர்ந்து மூர்த்தண்யமாக எதிர்த்து வாக்களித்து தோற்கடித்தன!

எம். ஸி. சுப்பிரமணியம் கூட அதை எதிர்த்தார்!

இதன் பொருள் என்ன?

சாதியும், தீண்டாமையும் தமிழ்சமுதாயத்தில் அழிந்து ஒழியாது நீடித்து நின்று நிலைக்கவேண்டும் என்பதே இவர்களது அந்தரங்க ஆசை என்பதுதானே! அந்த ஆவலுக்கு சாதிவெறி எனும் சதை கம்யூனிஸ்டுகளின் கண்களை மறைத்து நிற்கிறது.

இப்படி சாதியொழிப்புப் பிரச்சினையில்— கபடநாடகமாடி வருகிறார்கள் சமதர்மம் பேசுகின்ற கம்யூனிஸ்ட் கட்சியினரும் ஆளும் ஐக்கிய முன்னணியினரும்!

சாதியொழிப்புத் தீர்மானத்தை எதிர்த்த மறுத்தது மட்டுமல்ல—

மரவரியொழிப்பைக் கொண்டு வந்து சீவல் தொழில் செய்துசீவனம் நடத்திவந்த உங்களின் வயிற்றிலடித்தவர்களும் இதே ஐக்கிய முன்னணியினரே!

இதனால் 15,000 சீவல் தொழிலாளர்களின் வாழ்வு குறையாடப்பட்டுள்ளது!

யாழ்மாவட்டத்தில் முடிக்குரிய நிலங்களை காணியற்ற சிறுபான்மைத் தமிழர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டுமென பாராளுமன்றத்தில் தமிழர் கூட்டணியைச் சேர்ந்த உடுப்பிட்டி பா. உ., திரு. க. ஜெயக்கொடி பிரேரணை கொண்டு வந்தபோது — அதை எதிர்த்து வாக்களித்தவர்களும் இதே கம்யூனிஸ்ட், சமசமாஜ சுதந்திரக் கட்சியினரே!

இதுமட்டுமா?

உங்கள் பிள்ளைகள் தமிழ் மூலம் படிக்கும் வாய்ப்பை மறுத்து, புத்தூரில் உங்கள் பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களத்தை வலுக்கட்டாயமாக திணித்தவர்கள் இதே வி. பொன்னம்பலம் சார்ந்து நிற்கும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினரே!

எனவே என்னருமை உடன் பிறப்புக்களே!

சமதர்மம்பேசிக்கொண்டு அதே வேளையில் சாதியொழிப்பை எதிர்த்து— இரட்டைவேடம் போடுகின்ற கம்யூனிஸ்ட் கபடநாரிகளை இனங்கண்டு உங்கள் மத்தியிலிருந்து விரட்டுங்கள்!

சாதியும் தீண்டாமையும் ஒழிக்கப்பட்ட—ஒரு சமதர்மத் தமிழ் சமுதாட்டை அமைக்கப்போராடும் தமிழர் கூட்டணியின் தானைத் தலைவர்—மூதறிஞர் தந்தை செல்வாவின் பக்கமே அணி திரண்டு நின்று அவருக்கு பெருவெற்றி சேருங்கள்!

சாதியும் தீண்டாமையும் ஒழிக்கப்பட்ட சமதர்மத் தமிழகம் கண்டிட வீட்டுச் சின்னத்திற்கு வாக்களியுங்கள்! விடுதலைபெற்ற தமிழ் ஈழம் கண்டிடும் போர்ப்படையில் சேருங்கள்!

—கோவை

# சத்தியப்பிரமாணமும் தட்டுவாணித்தனமும்!

பாராளுமன்றத்துக்கு வரும் சட்டங்களை எதிர்க்கட்சியினர் மூர்த்தண்யமாக எதிர்க்கின்றனர். எனினும் சட்டம் நிறைவேற்றப்பட்டதும் அச்சட்டத்தைப் பாராளுமன்றத்தில் மாற்றியமைக்கப் போராடி வருவர். அவ்வாறு சட்டம் மாற்றப்படும்வரை அந்தச் சட்டத்தின்கீழ் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு. எதிர்க்கட்சியினர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியதும் அச்சட்டங்களை மாற்றிவைப்பர்.

அதுவரை அவர்கள் வனவாசம் போகமுடியாது!

பிடிக்காத சட்டம் என்று வனவாசம் போவதானால் அந்தச் சட்டத்தை மாற்றி வைக்கும் ஆட்கள் வேறு யார்?

எனவே— இது பாராளுமன்ற மரபு!

மூதறிஞர் செல்வா சோல்பரி அரசியல் திட்டத்தை மூர்த்தண்யமாக எதிர்த்தார். சட்டம் நிறைவேறியது. அவர் வனவாசம் போக மூட்டை கட்டவில்லை. சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அரசியலமைப்பை மாற்றி வைக்கும் போராட்டத்திற்கு அணி திரட்டினார்.

இலட்சியம் சிதையவில்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசுக்கு எதிராக வாழ்நாள் முழுவதும் போராடி வன் சிறையில் நலிந்தார் நேரு. போராட்டம் வெற்றிபெற்றுப் பாராளுமன்றம் போனதும் முதன்முதல் அவர் அதே ஏகாதிபத்திய அரசுக்கு விசுவாசம் தெரிவித்துச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இலட்சியம் சிதையவில்லை.

இலங்கையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசு திணித்த அரசியலமைப்புக்கு எதிராக இடதுசாரி வீரர்கள் போராடி வந்தார்கள்

1948ல் சுதந்திரதினவைபவத்தைப் பகிஷ்கரித்தார்கள். வனவாசம் போகவில்லை, நேரே பாராளுமன்றத்தில் போய் முதல் அலுவலாக அதே ஏகாதிபத்திய அரசுக்கு இராசபக்தி தெரிவித்து சத்தியம் செய்து கடவுளரையும் உதவிக்கு அழைத்து மகாராணியை மாத்திரமல்ல—சந்ததி சந்ததியாக அவருக்குப் பின் வருபவர்களையும் விழுந்து அடி போற்றி வணங்குவோம் என்றார்கள்.

வனவாசம் போகவில்லை!

என். எம். பெரேரா கொல்வின், லெஸ்லி, விக்கிரமசிங்கா போன்ற இந்த இடதுசாரித்திரர் வரிசையில் வரும் ஒரு வீரரின் பெயரை வாசிக்க விரும்பும் நண்பர்கள் ஒன்று செய்யலாம்.

1947ஆம் ஆண்டுப் பாராளுமன்ற ஆன்சாட் அறிக்கை தொகுதி 1 இல் 11ஆம் 12ஆம் பந்தியை எடுத்துப் பாருங்கள் அந்தப் பெயர் இவ்வாறு இருக்கின்றது!

"மிஸ்டர் பீட்டர் ஜெரால்டு பர்தலோமியஸ் கெனமன் (கொழும்பு மத்திய தொகுதி 3வது பிரதிநிதி)"

இந்த நேர்மையாளன் செய்துமுடித்த சத்தியப்பிரமாணம் இதுதான்!

"......ஆகிய நான் இலங்கையின் இராணியாகிய மாட்சிமை தங்கிய இரண்டாம் எலிசபெத் மகாராணியாருக்கும் சட்டப்படியான அவர்களுடைய உரிமையாளர்க்கும் பின் பதவி வகிப்பவர்கட்கும் விசுவாசமுள்ளவராயும் உண்மையான இராசபக்தி கொண்டுள்ளவராயும் இருப்பேனென்று சத்தியஞ்செய்து கொள்ளுகின்றேன். அங்ஙனம் ஒழுகுவதற்குக் கடவுள் எனக்குத் துணை புரிவாராக."

எனையோரின் சத்தியப்பிரமாணம் நெறிகெட்டது என்று பத்தினி வேடம் போடுகிறார்கள் கெனமனும் கங்காணிமாரும் கிராமிய மொழியில் இந்தக் கோலத்துக்குப் பெயர்—

தட்டுவாணித்தனம்!

## வாக்களிப்பது . . .

—1-ம் பக்கத் தொடர்

தனிலே பங்கு பற்றும் சந்தர்ப்பமும் மறுக்கப்பட்டுள்ளது.

ஆகவே நீண்டகாலமாக எந்த விதமான குற்றமும் காணப்படாத திரு. சேனாதிராசா புஷ்பராசா போன்ற வாக்காளர்களை உடனடியாகவிடுதலைசெய்ய வேண்டும்."

—இவ்வாறுதேசிய அரசுப் பேரவையில் பேசிய சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் குறிப்பிட்டார்.

இதற்குப்பதிலளித்த திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி இவ்விடயம்தொடர்பாக உடனடியாக கவனமெடுப்பதாகத்தெரிவித்தார்.

## தமிழர் கூட்டணி...

—1ம் பக்கத் தொடர்

கள் வருமாறு:—க. இராமச்சந்திரன் (தெல்லிப்பளை) திரு. க. மாணிக்கம் (பண்ணை) நா. கருணாநந்தசிவம் (காங்கேசன்துறை) திரு. சி. சிவாஞானம் (வசாவிளான்.)

இடைத்தேர்தலில்ஏற்படவிருக்கும் முடிவுக்கு இது முன்னுதாரணமாகத் திகழுகிறது.

# கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரியில் தபால் அட்டை இயக்கம்!

தமிழ் இளைஞர் பேரவையின் சாவகச்சேரி தொகுதிக்கிளையினர் காங்கேசன்துறை இடைத்தேர்தலையொட்டி தபாலட்டை இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளனர். காங்கேசன்துறை இடைத்தேர்தலின் முக்கியத்துவத்தையும், அதில் மூதறிஞர் செல்வாவுக்கு ஆதரவு தருவதன் அவசியத்தையும் விளக்கி, காங்கேசன்துறைத்தொகுதியிலுள்ள தங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தினசரி ஏராளமான தபாலட்டைகளை இவர்கள் அனுப்பிவருகின்றனர்!


# சுதந்திரன்

SUTHANTHIRAN


# தமிழன் தமிழில் கடிதம் எழுதினால் பதில் வருகிறது தனிச் சிங்களத்தில்!

# இழந்த உரிமை ஏதெனக் கேட்கும் வி.பி!

# இனி நீ ஓடு மூளைகழுவ மாஸ்கோ நோக்கி!

"தமிழர்களின் எந்த உரிமைகள் ஐக்கிய முன்னணி அரசின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளதென்று கேட்கும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கங்காணி திரு. வி. பொன்னம்பலமே! ஒரு தமிழன் அரசுக்கு தமிழில் கடிதம் எழுதினால் பதில் தனிச் சிங்களத்தில் அனுப்பப்படுகிறதே! சாதாரண தமிழ் மகன் தனக்கு வந்த சிங்களக் கடிதத்தின் அர்த்தம் புரியாது அவதிப்பட நேருகிறதே; இதனால் நாளாந்தம் எத்தனை தமிழர்கள் அவதிப்படுகின்றனர் என்பது உமக்குத் தெரியுமா? இது தமிழனின் உரிமையை பாதிப்பது ஆகாதா?"

—இவ்வாறு அரசின் தனிச் சிங்களக் கொள்கையால் துன்புறும் தமிழர்கள் திரு. வி. பொன்னம்பலத்தை நோக்கிக் கேட்கின்றனர்.

அண்மையில் இருவர் இந்தத் தனிச் சிங்களக் கடிதங்களால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக நமக்கு புகார் கூறியுள்ளனர். இருவரும் முக்கியமானவர்கள், ஒருவர் நடைமுறைத் தமிழியக்கத் தலைவர் திரு. இளையதம்பி, மற்றவர் மூதூரைச் சேர்ந்தவரும் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவருமான திரு. ரூச் டீ வாஸ்.

திரு. இளையதம்பி யாழ்ப்பாணத்திலுள்ள 'வைமன்' வீதியின் பெயரை "உவைமன் கதிரவேற்பிள்ளை வீதி" எனப் பெயர் மாற்றம் செய்வதுபற்றி உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள அமைச்சரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவுக்கு தமிழில் எழுதிய கடிதத்துக்கு, அமைச்சர் தனிச் சிங்களத்தில் பதில் எழுதியிருக்கிறார். திரு. இளையதம்பி அமைச்சருக்கு இத் தனிச் சிங்களக் கடிதத்தை திருப்பி அனுப்பி—தாய் மொழி தவிர வேறு ஒரு மொழியும் தெரியாத தனக்கு தனிச் சிங்களத்தில் பதிலனுப்பியது அநியாயமென்றும், தமிழில் பதில் தரும்படியும் கோரியிருக்கிறார்.

இதே போல் மூதூரைச் சேர்ந்த ரூச் டீ வாஸ் அவர்கள் தமது அஞ்சற் கட்டளையொன்று காணமற்போனது பற்றி அஞ்சற்றிணைக்களத்துக்கு தமிழில் எழுதிய புகாருக்கு அடுத்தடுத்து மூன்று தனிச்சிங்களப் பதில்கள் அத்திணைக்களத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளன. இறுதியாக வந்த தனிச் சிங்களக் கடிதம் 10-12-74ல் அனுப்பப்பட்டுள்ளது. இத்திணைக்களம் அஞ்சல்துறைக்கு பொறுப்பான அமைச்சர் செல்லையா குமாரசூரியர் என்பதும், இவர் ஒரு தமிழர் என்று சொல்லப்படுவதும் தெரிந்ததே.

### முரசு கொட்டுது தமி..

—1-ம் பக்கத் தொடர்

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர் பேரவைகளின் துடிப்பான இளைஞர்களும், தமிழர் கூட்டணி ஆதரவாளர்களும் காங்கேசன்துறையில் பாசறை அமைத்து இரவு பகலாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்!

மட்டக்களப்புக்கு சென்றிருந்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் மீண்டும் 28-1-75 முதல் தேர்தல் நாள் வரை தொடர்ச்சியாக காங்கேசன்துறைத் தொகுதியிலேயே தங்கி பிரசார வேலைகளில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருக்கிறார்.

மலையகத்திலிருந்து, இ. தொ. சமூக துணைத் தலைவர் திரு. செங்கரத்தினம் தலைமையில் ஒரு குழுவினர் காங்கேசன்துறைத் தொகுதியில் முகாம் அமைத்துப் பணிபுரிந்து வருகின்றனர்!

சிறுபான்மைத் தமிழர் சமூகத்தில் வ. பொ. வுக்கு இதற்கு முன்னிருந்து வந்த ஆதரவு பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. சாதிப் பிரச்னையில் அரசும், கம்யூனிஸ்டுகளும் கடைப்பிடித்துவரும் இரட்டை வேடத்தை அவர்கள் உணர்ந்து, தந்தை செல்வாவின் பக்கம் இப்போது அணிதிரண்டுள்ளனர்.

தமிழர்கள் இப்படி ஒருமித்து, தமிழர் கூட்டணித் தலைவரை ஆதரிக்க முன்வந்திருப்பது கண்டு மாற்றார் தினமும் ஆத்திரமுற்றுள்ளனர். இதன் பயனாக தமிழர் கூட்டணிக் கூட்டங்களுக்கு கல்லெறிந்து வன் செயல்களை தூண்டிவிடுவதில் அவர்கள் இப்போது ஈடுபட்டுள்ளனர்.

மல்லாகத்தில் 22-1-75 அன்று இரவு நடைபெற்ற தமிழர் கூட்டணிக் கூட்டத்தில் மாற்றாரின் கூலிப்படையினர் கல் வீசியதன் காரணமாக இளம் பெண் ஒருவர் தலையில் காயம் ஏற்பட்டது.

இதேபோல் இக்கூட்டம் முடிந்து மாவிட்டபுரம் கோயிலில் வந்துகொண்டிருந்த தமிழர் கூட்டணி இளைஞர்கள் சிலரும் மாற்றாரின் கூலிப்படைகளினால் தாக்கப்பட்டனர்.

### ஸ்ரீதனஸ்ரீ ஏழுமுக..

—2-ம் பக்கத் தொடர்

பர: எங்கை கொஞ்சம் நாடியைப் பார்ப்பம் வாத்தியார். கையை நீட்டுங்கோ.

அம்: சாச்சா... அதெல்லாம் எலக்சன் முடியட்டும். நான் ஒருக்கா மொஸ்கோவுக்குப் போய் காட்டிக் கொண்டு வரவேணும்.

பர: அதென்ன வாத்தியார், வெறும வயிற்றுக் குத்து வந்தாலும் அங்கை ஓடுறியள். உங்கை எல்லாரும் இஞ்செச்சாதிலை ஒரு குளிசையை உரைச்சுக்குடிச்சுப் போட்டு போறுங்கள்.

அம்: அது உமக்கு விளங்காது பரியாரியார், மொஸ்கோவிலை ஒருவகை ஜின் குடுப்பினம், வருத்தமெல்லாம பறக்கும். குடிவகை இல்லை. இது மருந்துவகை.

பர: அது பெரிய புதினமாயிருக்குது. இஞ்சை இது இல்லையா? என்ன பேர் வாத்தியார் அதுக்கு.

அம்: கொசிஜின்... மூளைக் களைப்புக்கு மெத்த விசேசம்

பர: அப்படிச் சொல்லுங்கோவன்... எட நீங்கள் வந்த விசயத்தை நான் மறந்துபோனன். (உள்ளே திரும்பி) மங்களம்! மங்களம்!

(மனைவி மங்களம் வருகிறாள்)

இஞ்சை எலச்சன்காறரெல்லை வந்திருக்கினம். உவர்தான் எலச்சன் கேக்கிற வாத்தியார்...

மங்: வாத்தியார்! தோவிக்காலை தயங்கோ இன்டைக்கு தமிழற்றை பிரச்சினை என்னெண்டு உங்களுக்கு தெரியும். இந்த நேரத்திலை தமிழர் கூட்டணியைத்தான் ஆதரிக்கவேணும்.

அம்: தமிழர் கூட்டணி தமிழருக்காக செய்ததென்ன... அது என்னவெண்டு சொல்லுங்கோ.

மங்: நீங்கள் அரசாங்கத்தோடை சேர்ந்து இழிச்சதையெல்லாம் உடனுக்குடனை தைச்சுக்கொண்டிருக்கு....... அது போதாதே.

அம்: சரி சரி...நான் பிழையான இடத்துக்கு வந்திட்டன் ... பரியாரிதான் ... வாதன். (போகிறார்.)

(இனி)

### கௌரவமல சார்...

—1-ம் பக்கத் தொடர்

கள மாணவன் 229புள்ளிகளை எடுத்தால்போதும்! பொறியியலுக்கு தமிழ் மாணவன் 250 புள்ளிகள் எடுக்க வேண்டும்; சிங்கள மாணவனோ 227புள்ளிகளை எடுத்தால் போதும்! பௌதீக விஞ்ஞானத்துறைக்கு தமிழ் மாணவன் 204 புள்ளிகள் எடுக்கவேண்டும்; சிங்கள மாணவனோ 183 புள்ளிகள் எடுத்தால் போதும்! இப்படியெல்லாம் பாரபட்சமான திட்டங்களைப் புகுத்தியீர்களே—இதனால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? தமிழரா சிங்களவரா?

"அநீதிகளுள்ளாக்கப் பட்டவர்கள் தமிழர்கள்தான் என்பதைக் கூட பகிரங்கமாக ஒப்புக்கொள்ளக்கூடிய துணிச்சலற்ற நீங்களா தரப்படுத்தலை கைவிட்டு திறமை அடிப்படையை புகுத்தப் போகிறீர்கள்? உங்களை நம்ப தமிழன் வெறும் இளிச்சவாயனில்லை மிஸ்டர் பீட்டர் கெனமன்"—ஆயினையன

### தமிழினம் இன்று...

—1-ம் பக்கத் தொடர்

இந்த இடைத்தேர்தலில் நான் வெற்றிபெற்று தேசிய அரசுப்பேரவைக்கு சென்றதும்—தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழவிரும்புகிறார்கள்; அவர்கள் தம்மைத் தாமே ஆளவேண்டும் என்று இத்தேர்தல் மூலம் நிரூபித்துவிட்டார்கள்; ஆகவே எமக்கு தனிநாடுவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பேன்!

"ஆனால் இதை திரு. வ. பொன்னம்பலம் கேட்பாரா என்பதைச் சிந்திக்கவேண்டும். அவர் சிங்கள மக்களுக்கு அடிமையாக எமது இனம் இருக்கவேண்டுமென்று சொல்பவர். எப்படி அவரால் தமிழ் நாடு கோர முடியும்! இதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்."

### தமிழர் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள்!

நடக்கவிருப்பவை

30-1-75 வியாழன்—கட்டுவன் மேற்கு, பட்டிக்கடவை மாவிட்டபுரம்.

31-1-75 வெள்ளி—கட்டுவன் தெற்கு, கொல்லங்கலட்டி, மயிலிட்டிக்கரை.

1-2-75 சனி—பலாலி, அளவெட்டிமத்தி, கீரிமலை யசந்தபுரம்.

2-2-75ஞாயிறு—இளவாலை பத்தாவத்தை, வீமன்காமம் பன்னாலை.

3-2-75 திங்கள்—மாதகல் மத்தி மயிலிட்டி வடக்கு

4-2-75செவ்வாய் (இறுதிக் கூட்டம்) — தெல்லிப்பழை (கூட்டுறவு வைத்தியசாலைக்கு அருகில்.)

## இப்பொழுது விற்பனையாகிறது!

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் எழுதிய—

**துரோகிகளே தூரவிலகுங்கள்!**

- இது சுதந்திரன் வெளியீடு—(3)
- விலை தனிப்பிரதி ரூபா 2-50

வியாபாரிகளுக்கு கழிவுண்டு தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-10க்கு அஞ்சல் கட்டளை, காசுக்கட்டளை அல்லது காசோலை அனுப்புக.

சுதந்திரன் வெளியீட்டகம்
194 ஏ, பண்டாரநாயகா வீதி கொழும்பு-12

### கொள்கைக் குழப்பம்!

"தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு பிரதேச சுயாட்சி வேண்டும்!"

—காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய முன்னணி வேட்பாளர் வ. பொ. வின் தேர்தல் விஞ்ஞாபனம்.

"திரு. அமிர்தலிங்கம் மாவட்ட சபை வேண்டுமென்றார். அது சாத்தியமில்லை என்றேன். மாவட்ட சபை வழங்கினும் பிரிவினைக்கு வழிவகுத்து விடுமென்றேன்."

—காங்கேசன்துறை இடைத்தேர்தல் பிரசாரத்தில் ஐக்கிய முன்னணி அமைச்சர் ரி. பி. இலங்கரத்தின (வீரகேசரி 26-1-75.)

### சொன்னார்கள்

"சிங்கள நாளை ஒருவர் இந்நாடு பிரிக்கப்படுவதை உயிரைக் கொடுத்தாலும் தடுப்பேன் எனக்கூறியுள்ளார். அதுபோலவே, தாங்களும் தனிநாடு அமைக்க முடிவு செய்தால் — உயிர் கொடுத்தேனும் அதை அமைத்தே தீருவோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்."

—டாக்டர் தேவநாதன் 22-1-75ல் நடைபெற்ற மல்லாகம் கூட்டத்தில்.

●

"இன்று தமிழர் கூட்டணித் தலைவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் படிப்பதாக கூறிவருகிறீர்கள், தொழிலாள வர்க்கத்திற்காக...பாட்டாளி வர்க்கத்திற்காக போராடுவதாகக் கூறும் உங்கள் பிள்ளைகள் எங்கே படிக்கிறார்கள் என்பதை கூறுவீர்களா? வி. பொன்னம்பலம் படித்தது இந்தியாவில்! திரு. வைத்திலிங்கத்தின் பிள்ளைகள் அமெரிக்காவிலும், டாக்டர் விக்கிரமசிங்காவின் பிள்ளைகள் நீங்கள் ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடு என்று கூறும் இங்கிலாந்திலும் படிக்கிறார்கள். என் உங்கள் கல்வி சிறிமாவோ பண்டாரநாயகாவிடம் கேளுங்கள்—அவரது பிள்ளைகள் எங்கு படித்தார்கள் என்று!"

—வி. தர்மலிங்கம் (பொற்பதி கூட்டத்தில்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பேர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகா வீதி 194 ஏ இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு 1975ம் ஆண்டு சனவரி 29ம் திகதி புதன்கிழமை வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org